வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி-20.12.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டன.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் இன்று நிகழ்ந்த எரிவாயு டேங்கர் தீ விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்பு குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் துயரம் வெளியிட்டு உள்ளனர்.

புதுச்சேரியில் இருந்து பெங்களூரு மற்றும் ஐதராபாத்திற்கு மீண்டும் விமான சேவையை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளுவதற்கான திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

நாடாளுமன்றம்

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டன. முன்னதாக இன்று காலை மக்களவை கூடியதும் டாக்டர் பி ஆர் அம்பேத்கர் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்த கருத்தை ஆட்சேபித்து எதிர்கட்சி உறுப்பினர்கள் முழக்கங்களை எழுப்பினர். இதனால் அவையில் கூச்சல் குழப்பம் நிலவியது. அப்போது அவைத் தலைவர் திரு ஓம் பிர்லா உறுப்பினர்கள் விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தில் எந்த நுழைவு வாயிலிலும் போராட்டம் நடத்துவதை தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்திய அவர் தவறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார். நாடாளுமன்றத்தின் கண்ணியத்தை பாதுகாப்பது அனைத்து உறுப்பினர்களின் கூட்டுப் பொறுப்பு என்று அவர் மேலும் கூறினார். இந்த அமளிக்கு மத்தியில் ஒரே நாடு-ஒரே தேர்தல் தொடர்பான இரண்டு மசோதாக்கள் நாடாளுமன்றத்தின் கூட்டுக் குழுவுக்கு அனுப்பப்பட்டன. அதனைத் தொடர்ந்து

அவைத் தலைவர் திரு ஓம் பிர்லா மக்களவையை கால வரையறை இன்றி ஒத்தி வைத்தார். இதற்கிடையே, மாநிலங்களவையிலும் எதிர்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாக முதலில் நண்பகல் 12 மணி வரை அவை ஒத்தி வைக்கப்பட்டது. இன்று காலை அவை கூடியதும் ஆளும்கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே முழக்கங்கள் மற்றும் எதிர் முழக்கங்கள் என சபை அமளியுடன் காணப்பட்டது. அப்போது மாநிலங்களவை தலைவர் திரு ஜெகதீப் தன்கர் மக்கள் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். மேலும் உறுப்பினர்களிடையே பொறுப்புக் கூறல் மற்றும் சுயபரிசோதனை தேவை என்றும் வலியுறுத்திய அவர் நாடாளுமன்ற நடவடிக்கைகளின் நிலை குறித்து தனது கவலையைத் தெரிவித்தார். நண்பகல் 12 மணிக்கு மாநிலங்களவை மீண்டும் கூடியதும் ஒரே நாடு-ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்றக் கூட்டுக் குழுவிற்கு 12 உறுப்பினர்களை பரிந்துறைக்கும் தீர்மானம் முன் வைக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து அவைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் மாநிலங்களவையை மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தார். நாடாளுமன்ற இரு அவைகளின் குளிர்காலக் கூட்டத் தொடர் கடந்த மாதம் 25-ஆம் தேதி தொடங்கியது.

*ராஜஸ்தான்-விபத்து*

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் இன்று நிகழ்ந்த எரிவாயு டேங்கர் தீ விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் துயரம் வெளியிட்டு உள்ளனர். குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இந்த விபத்தில் உயிரிழப்பு குறித்த செய்தி மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது என்றும் காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிராத்திப்பதாகவும் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி தனது சமூக வலைதளப் பதிவில் இந்த செய்தியால் தாம் மிகுந்த வேதனை அடைந்ததாக தெரிவித்துள்ளார். காயம் அடைந்தவர்கள் விரைந்து குணமடைய பிராத்தனை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையே விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்சம் ரூபாயும், காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார். ஜெய்ப்பூரில் இன்று காலை நடைபெற்ற எரிவாயு டேங்கர் லாரி தீ விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 33 பேர் காயம் அடைந்துள்ளனர்.

*பிரதமர்-இரங்கல்*

அரியானா முன்னாள் முதலமைச்சர் ஓம் பிரகாஷ் சவுதாலா மறைவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தமது எக்ஸ் தளத்தில் அரியானா முன்னாள் முதலமைச்சர் ஒம் பிரகாஷ் சவுதாலாவின் மறைவு மிகவும் வருத்தமளிக்கிறது என்றும், அவர் பல ஆண்டுகளாக மாநில அரசியலில் தீவிரமாக செயல்பட்டவர் என்றும் தெரிவித்துள்ளார். சவுத்ரி தேவிலால் அவர்களின் பணிகளை முன்னெடுத்து செல்ல தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டவர் என்றும் இந்த துயரமான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும், ஆதரவாளர்களுக்கும் தமது இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*புதுச்சேரி-விமான சேவை*

புதுச்சேரியில் இருந்து பெங்களுரு மற்றும் ஐதராபாத்திற்கு மீண்டும் விமான சேவை தொடங்கி உள்ளது. புதுச்சேரி விமான நிலையத்தில் இன்று நடைபெற்ற விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டு விமான சேவையை தொடக்கி வைத்தனர். அப்போது பிற்பகல் 12. 25 மணி அளவில் பெங்களுரில் இருந்து புதுச்சேரி வந்த விமானத்தின் மீது இருபக்கமும் தண்ணீர் பீச்சியடித்து வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிற்பகல் 12. 45 மணியளவில் ஐதராபாத் புறப்பட்ட விமானத்தை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் கொடி அசைத்து அனுப்பி வைத்தனர். அதன் பின்னர் முதலமைச்சர் திரு ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேசினார். அப்பொழுது …….

(வாய்ஸ்)

இவ்விழாவில் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு சாய் ஜே சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பி எம் எல் கல்யாண சுந்தரம், திரு வைத்தியநாதன், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*குழந்தைகள் மருத்துவமனை*

புதுச்சேரியில் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் வகையில் எல்லைப்பிள்ளைச் சாவடியில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் மாவட்ட ஆரம்ப தலையீடு மைய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இம்மருத்துவமனை வளாகத்தில் இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு Mission Healthy Hearts என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடக்கி

வைத்தார். அப்போது உரையாற்றிய அவர் புதுச்சேரி அரசு மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட 99 சதவிகிதம் பேர் நலமாக இருப்பதாக தெரிவித்தார். புதுச்சேரியில் 54 குழந்தைகளுக்கு சிக்கலான இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் கூறிய அவர் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் புதுச்சேரிக்கு வந்து சிகிச்சை மேற்கொள்ளும் வகையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் …………

(வாய்ஸ்)

*பேருந்து கட்டணம்*

புதுச்சேரியில் 6 ஆண்டுகளுக்கு பிறகு பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதுகுறித்த அறிவிப்பை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் உத்தரவின் படி, போக்குவரத்து துறை கூடுதல் செயலர் திரு சிவகுமார் வெளியிட்டுள்ளார். உடனடியாக அமலுக்கு வந்துள்ள இந்த கட்டண உயர்வு குறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்…………..

(வாய்ஸ்)

*வானிலை*

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 12 மணி நேரத்தில் வடக்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறலாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக இன்றும் நாளையும் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மீன் வளர்ப்பு*

புதுச்சேரி அரசின் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை சார்பில் நன்னீர் குளங்களில் கொடுவா மீன் வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் இன்று காரைக்காலில் நடைபெற்றது. காரைக்காலில் உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில் மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமையின் முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் கோவிந்த சாமி கலந்து கொண்டு, பயிற்சியின் நோக்கம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். கருக்கலாச்சேரியில் உள்ள ராஜீவ்காந்தி நீர் வாழ் உயிரின மையத்தின் மூத்த அறிவியல் அதிகாரி முனைவர் தினகரன் கலந்து கொண்டு நன்னீர் குளங்களில் கொடுவா மீன் வளர்ப்பு குறித்தும், கொடுவா மீன் குஞ்சுகளை பெறுவதற்கான பதிவு முறைகள்

உள்ளிட்ட தேவையான தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் காரைக்காலில் உள்ள உள்நாட்டு மீன் வளர்ப்போர் பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

*கிரண் ரிஜிஜு*

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரின் போது மக்களவையில் 54 சதவிகிதத்திற்கு அதிகமாகவும் மாநிலங்களவையில் 40 சதவிகிதம் அளவிற்கு மட்டுமே ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் நடைபெற்றதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டத் தொடர் இன்று முடிவடைந்ததைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் இரு அவைகளிலும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் குறைந்திருப்பது குறித்து அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார். எதிர்கட்சி உறுப்பினர்களின் அமளியால் இரு அவைகளின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன என்றும் இந்தக் கூட்டத் தொடரில் மக்களவையில் 20 அமர்வுகளும், மாநிலங்களவையில் 19 அமர்வுகளும் நடைபெற்றதாக அவர் கூறினார். இந்தக் கூட்டத் தொடரில் மக்களவையில் 4 மசோதாக்களும், மாநிலங்களவையில் 3 மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டன.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் இன்று நிகழ்ந்த எரிவாயு டேங்கர் தீ விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்பு குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் துயரம் வெளியிட்டு உள்ளனர்.

புதுச்சேரியில் இருந்து பெங்களூரு மற்றும் ஐதராபாத்திற்கு மீண்டும் விமான சேவையை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளுவதற்கான திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------